DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous CC.No. 35/2023

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution
Defence

| | | |
|---|---|---|
| Name | : | வேல் (P.w.7) |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 10th day of September 2025

(எதிரி ஆஜர் )

**முதல் விசாரணை :–**

நான் தற்போது வீரக்குடியில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2 வது கைரேகை என்னுடையதுதான். (**அந்த பார்வை மகஜரில் உள்ள 2 வது கைரேகை அசாஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். எங்கு வைத்து கைரேகை செய்தேன் என்றால் ராமச்சந்திரன் காட்டில் வைத்து செய்தேன். நான் கைரேகை பதிவு செய்யும்போது போது அசா6 துாணன் மற்றும் போலிசார் இருவர் இருந்தார்கள். சம்பவ இடத்தில் பார்வையிடுவதற்காக வந்தோம் அதற்காக கைரேகை செய்ய சொன்னார்கள் நான் செய்தேன்.

**எ.த.கு.வி–**

போலிசார் எதற்காக கைரேகை வாங்கினார்கள் என்றால் படம் வரைந்ததற்காக கைரேகை வைக்க சொன்னார்கள். எத்தனைமணியளவில் கைரேகை செய்தேன் என்றால் மதியம் 1மணியளவில் கைரேகை பதிவு செய்தேன். வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். சம்பவ தேதியில் என்னிடம் கைரேகை வாங்கவில்லை என்றால் சரியல்ல. காவல் நிலையம் வரச் சொல்லி கைரேகை வாங்கினார்கள் என்றால் சரியல்ல. காவல் நிலையம் சென்று கைரேகை செய்துவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை –**

இல்லை

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous CC.No. 35/2023

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution
Defence

| | | |
|---|---|---|
| Name | : | தூணன் (P.w.6) |
| Father/Husband Name | : | தூணன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 10th day of September 2025

(எதிரி ஆஜர் )

**முதல் விசாரணை :–**

நான் தற்போது வீரக்குடியில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். (**அந்த பார்வை மகஜரில் உள்ள 1வது கையொப்பம் அசாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். அது எங்கு வைத்து போட்டேன் என்றால் ராமச்சந்திரன் காட்டில் வைத்து போட்டேன். நான் கையொப்பம் செய்யும்போது போது போலிசார் இருவர் இருந்தார்கள். சம்பவ இடத்தில் பார்வையிடுவதற்காக வந்தோம் அதற்காக கையொப்பம் செய்ய சொன்னார்கள் நான் செய்தேன். வரைபடம் வரைந்தார்களா என்று எனக்கு தெரியவில்லை.

**எ.த.கு.வி–**

கையொப்பம் செய்யும்போது இரண்டு காவலர்கள் இருந்தார்கள், என்னுடன் வந்த வேல்முருகனும் இருந்தார். போலிசார் காவல் நிலையம் வரச்சொல்லி கையொப்பம் வாங்கினார்கள் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் வைத்து பார்வையிட்டு படத்தினை தயார் செய்து கொண்டிருக்கும்போது கையொப்பம் வாங்கினார்கள். போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. காட்டில் வைத்து விசாரித்தார்கள்.

**மறு விசாரணை –**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous CC.No. 35/2023

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution
Defence

| | | |
|---|---|---|
| Name | : | உதயசூரியன் (P.w.5) |
| Father/Husband Name | : | ராக்கப்பன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 10th day of September 2025

(எதிரி ஆஜர் )

**முதல் விசாரணை :–**

நான் தற்போது வீரக்குடியில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 7, 8 வருடங்களுக்கு முன்பு நானும் ராமகிருஷ்ணனும் காலை 9 மணியளவில் ராமகிருஷ்ணன் வீட்டில் இருந்து பேசிக் கொண்டிருந்தபோது ராமச்சந்திரன், பாலுச்சாமி வேகமாக வந்தார்கள். நாங்கள் எங்கு வேகமாக வருகிறீர்கள் என்று கேட்டோம் அதற்கு அவர்கள் பனைமரத்தை வெட்டியதாக பிரச்சனை ஏற்பட்டது என்று சொன்னார்கள். யார் வெட்டினார்கள் என்று எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.)**

**அ.த.கு.வி :–**

கடந்த 17.11.2018 ம் தேதியன்று மாலையில் நானும் ராமகிருஷ்ணனும் எங்கள் வீட்டிற்கு வெளியே பேசி கொண்டிருக்கும்போது ராமச்சந்திரனும், பாலுச்சாமியும் வேகமாக வந்தததை பார்த்து அது குறித்து அவர்களிடம் கேட்டபோது சித்ரவேல் கூலிக்கு ஆள் வைத்து 7 பனைமரங்களை வெட்டிக்கொண்டு இருக்கும் தகவல் தெரிந்து சித்ரவேலிடம் கேட்டதற்கு அவர் ஒழுங்கா ஏங்கிட்ட வராமல்போயிருங்கடா தாயோலி மகன்களா கிட்ட வந்தீங்கனா உங்க இரண்டுபேரையும் அருவாளால் வெட்டிக் கொன்றுவிடுவேன் என்று மிரட்டியதாகவும் அது குறித்து காவல் நிலையத்தில் புகார் அளித்து வருவதாகவும் என்னிடம் ராமசந்திரனும் , பாலுச்சாமியும் கூறியதை போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது பிறழ்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எ.த.கு.வி–**

போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். ராமச்சந்திரனும், பாலுச்சாமியும் என்னிடம் மாலை நேரத்தில் சொன்னார்கள் என்றால் காலை நேரத்தில் தான் சொன்னார்கள். ராமகிருஷ்ணன் வீட்டிற்கும் எனது வீட்டிற்கும் இடையே எவ்வளவு துாரம் இருக்கும் என்றால் 10, 15 அடி இருக்கும். மரம் வெட்டும் சம்பவம் நடக்கவில்லை என்றால் சரியல்ல. நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான்.

**மறு விசாரணை –**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous CC.No. 35/2023

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution
Defence

| | | |
|---|---|---|
| Name | : | ராமகிருஷ்ணன் (P.w.4) |
| Father/Husband Name | : | சுந்தர்ராஜ் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 10th day of September 2025

(எதிரி ஆஜர் )

**முதல் விசாரணை :–**

நான் தற்போது வீரக்குடியில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 8 வருடங்களுக்கு முன்பு காலையில் ஒரு 9.00 மணியளவில் நான் எனது வீட்டு வாசலில் உட்கார்ந்திருந்தபோது ராமச்சந்திரன் என்பவர் வந்து சித்ரவேல் மரம் வெட்டுவதாக கூறினார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எ.த.கு.வி–**

ராமச்சந்திரன் மரம் வெட்டுவதாக சொல்லும்போது யாரெல்லாம் உடன் இருந்தார்கள் என்றால் உதயசூரியன் என்பவர் இருந்தார். சித்ரவேலுக்கும் ராமச்சந்திரனுக்கும் முன்விரோதம் இருந்ததா என்றால் இல்லை. முதல்

விசாரணையில் மரம் வெட்டுவதாக சொன்ன தகவல் எத்தனை மணிக்கு தெரிவிக்கப்பட்டது என்றால் காலை 9 மணிக்கு ஆகும். நான் காலையில் யார் வீட்டில் இருந்தேன் என்றால் எனது வீட்டில்தான் இருந்தேன். என்னை போலிசார் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். ராமச்சந்திரனிடம் பணம் வாங்கிக் கொண்டு பொய்யாக சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை –**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.